DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 52/2024** |
| Deposition of Witness for | : PW 5 |
| Name | : டாக்டர்.மாரியம்மாள் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 29.01.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 29th January 2026.

**எதிரி ஆஜர். எதிரிகள்தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது மதுரை திருமங்கலம் அரசு மருத்துவமனையில் முதன்மை குடிமை பணி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.07.2011 அன்று இரவு 9.45 மணியளவில் வேளாங்கன்னி என்பவரை 108 ஆம்புலன்சில் அவருடைய தகப்பனார் ராயர் என்பவர் அழைத்து வந்தார். 05.07.2011 அன்று கீழநீலிதநல்லூரில் அவருடைய கணவருடன் ஏற்பட்ட சண்டையின் காரணமாக கிணற்றில் குதித்துவிட்டதாக கூறினார். அவருடைய கணவர் அவரது கழுத்தை நெறித்ததாகவும் கூறினார். அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. இடது கால் டிபியா எலும்பு உடைந்து காணப்பட்டது, அந்த எலும்பு வெளியில் தெரிந்தது. ரத்தக்கட்டு காணப்பட்டது.

2. இடது கணுக்கால் வீங்கியும், வலியுடனும் காணப்பட்டது. அந்த பகுதியில் எலும்புமுறிவு ஏற்பட்டிருக்க வாய்ப்பு இருந்திருக்கலாம்.

3. வலது காலில் பல சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டன. அவரை மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். திருநெல்வேலியிலிருந்து வரப்பட்ட காயச்சான்றின் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட 1 மற்றும் 2 காயங்கள் கொடுங்காயங்கள் என்றும், 3 வது காயம் சாதாரண காயம் என்றும் சான்று அளித்தேன். **அவரது காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி காயங்கள் கம்பியால் அடிக்கப்படும்போது ஏற்பட வாய்ப்புண்டா என்றால் வாய்ப்புண்டு. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

காயம்பட்ட நபரான வேளாங்கன்னிசிகிச்சைக்கு வரும் போது சுயநினைவுடன் இருந்தார் என்றால் சரிதான். காயம்பட்ட நபரின் கழுத்துப்பகுதியில் நகக்கீரல்களோ, விரல் தடங்களோ இருந்ததா என்றால் இல்லை. காயம்பட்ட நபர் தன்னை யாரேனும் கம்பியால் தாக்கியதாக என்னிடம் கூறினாரா என்றால் இல்லை. போலீசார் கம்பியை காண்பித்து காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயம் தொடர்பாக என்னிடம் விசாரித்தார்களா என்றால் இல்லை. அ.சா.ஆ.3 ஆவணத்தில் காயம்பட்ட நபர் 4 வருடங்களாக திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 06.07.2011 முதல் 25.10.2011 வரை காயம்பட்ட நபர் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**மறுவிசாரணை இல்லை.**